கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் கூட்டம், தொ.மு.ச, அலுவலகத்தில், சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெற்றது. தொகுதி பொறுப்பாளர், முன்னாள் எம்.எல்.ஏ, பா.துரைசாமி முன்னிலை வகித்தார். கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் சி.வி.கணேசன் சிறப்புரையாற்றினார். முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன், ஒன்றிய கழக செயலாளர்கள் அ.குணசேகரன், ஆர்.சந்தோஷ்குமார், நகரச் செயலாளர் வி.குருநாதன் பொதுக்குழு பொ.புகழேந்தி, க.அறிவழகன், என்.பாரி, அவைத் தலைவர்கள் வீர.இராமச்சந்திரன், என்.நன்மாறபாண்டியன், தொ.மு.ச,நிர்வாகிகள் ஞா.ஞான ஒளி ,ஏ.அப்துல் மஜீத், ஆர்.சீனிவாசன் , இளைஞரணி ஆர்.ராஜேஷ்,உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இசுக்கழிகாட்டேரி ஊராட்சியில் உள்ள நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த சக்திமுருகன், அருள்முருகன், சரத்குமார், மணிகண்டன், விக்னேஷ், வேலன், மணிபாலன், அஜித்குமார், மனோகரன், சரணபவ, செல்வகுமார், வெங்கடேசன், செந்தில் ஆகியோர் அக்கட்சியில் இருந்து விலகி தமிழ்நாடு சட்டபேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் சி.மாரிமுத்து, இசுக்கழிகாட்டேரி முன்னாள் தலைவர் ஜோதி, கிளை கழக செயலாளர்கள் பாலசுந்தரம், அருணகிரி ஆகியோர் உடன் இருந்தனர்.

596 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு

அரியலூர் மாவட்டத்தில் ரூ.46.11 கோடி மதிப்பிலான கடனுதவிகள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், ஜீன் 17 - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் சுய உதவிக் குழு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மாநில அளவிலான மணிமேகலை விருது மற்றும் வங்கி கடன் இணைப்பு வழங்கும் அரசு விழாவின் நேரலை அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு பார்வையிட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் 596 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.46.11 கோடி மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் பொ. இரத்தினசாமி, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக்குழு இயக்கத்தை மாநிலம் முழுவதும் பரவலாக்கி, கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்புதன்மை மூலம் பெண்களின் நிலையை மேம்பாடு அடையச் செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய இரண்டு திட்டங்களை அரியலூர் மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறது.

இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாடு அரசு 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) உதவியுடன் வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரைக் கொண்டு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களை அமைக்கத் தொடங்கியது. மகளிர் முன்னேற்றத்திற்காக, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் துவங்கப்பட்ட இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு தற்போது சமூக பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு மகளிரைக் கொண்டு சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகளை உருவாக்கி முறையாக பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்கி வங்கி கடன் இணைப்புகள் ஏற்படுத்தி சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்தி வருகிறது. தற்போது மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களைக் கொண்ட சிறப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி அரியலூர் மாவட்டத்தில் ஊரக பகுதியில் 2025-26 ஆம் ஆண்டு ஊரக மற்றும் நகரப்பகுதியில் உள்ள சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி நேரடி கடன் 6,129 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.547 கோடி இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டத்தில் தற்போது வரை 754 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.75.29 கோடி இலக்கீடு அடையப் பெற்றுள்ளது.

அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநில அளவிலான மணிமேகலை விருது மற்றும் வங்கி கடன் இணைப்புகள் வழங்கியதை தொடர்ந்து, அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் மாவட்டத்தில் ஊரக / நகர்ப்புர பகுதிகளில் செயல்பட்டு வரும் 454 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.45.29 கோடி மதிப்பிலான வங்கி நேரடி கடன் தொகையும், வட்டார வணிக வளமைய தொழில் கடன் 107 மகளிர் சுய உதவிக்குழு பயனாளிகளுக்கு ரூ.52.60 இலட்சம் கடன் தொகையும் மற்றும் தொழில் முனைவோர் கடனாக 35 பயனாளிகளுக்கு ரூ.29.68 இலட்சம் என ஆக மொத்தம் ரூ.46.11 கோடி மதிப்பில் கடன் தொகையை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து, மகளிர் சுய உதவிக்குழுவை சேர்ந்த முத்தமிழ்ச் செல்வி என்பவர் தெரிவிக்கையில், எனது சொந்த ஊர் அணிக்குறிச்சி கிராமம். இன்றையதினம் எங்களது சுய உதவிக்குழுவிற்கு ரூ.12 இலட்சம் கடனுதவி தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது. இக்கடனுதவியை கொண்டு எங்கள் குழு உறுப்பினர்கள் சுய தொழில் மேற்கொள்ள உள்ளோம். இதன் மூலமாக எங்களது பொருளாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள முடியும். எங்கள் சுய உதவிக்குழுவிற்கு கடனுதவி அளித்த தமிழ்நாடு அரசுக்கு நன்றி என முத்தமிழ்ச்செல்வி என்பவர் தெரிவித்தார்.

இதேபோன்று திருமதி. சீதா என்பவர் தெரிவிக்கையில், நான் தா.பழூர் ஒன்றியம், காடுவெட்டாங்குறிச்சி கிராமத்திலிருந்து வருகிறேன். நாங்கள் ரோஜா மகளிர் சுய உதவிக் குழுக்களாக செயல்பட்டு வருகிறோம். தற்போது எங்கள் குழுவிற்கு தமிழ்நாடு அரசு சார்பில் ரூ.20 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாடுகள் வளர்ப்பு மற்றும் ஆடுகள் வளர்ப்பு ஆகியவற்றை மேற்கொள்ள உள்ளோம். எங்களைப்போன்று கிராமப் பகுதியில் உள்ள பெண்களுக்கும் இதுபோன்று கடனுதவிகள் வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு நன்றி என சீதா என்பவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் ரவிச்சந்திரன், அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.முத்து கிருஷ்ணன், அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், கூட்டுறவுத்துறை மண்டல இணைப்பதிவாளர் உமா மகேஸ்வரி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சங்கர சுப்ரமணியன், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் கோவிந்தராஜ், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, அரியலூர் வட்டாட்சியர்முத்துலெட்சுமி, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றிய பொறுப்பாளர் ஆர். கலியபெருமாள், நகர செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், இதர அரசு அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தஞ்சை செழிக்கட்டும்!

உழவர் பெருமக்கள் வளம் காணட்டும்!

கல்லணை திறப்பு குறித்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னைன, ஜீன் 16 - "பொன்னி நதியால் தஞ்சை செழிக்கட்டும்! உழவர் பெருமக்கள் வளம் காணட்டும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கல்லணை திறப்பு குறித்து தமது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

காவிரி டெல்டா பாசனத்திற்காக கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்து விட்ட பிறகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

"காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு வளம்பெருக்கிப் பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கி" எனப் பட்டினப்பாலை பாடும் கரிகாற்பெருவளத்தான் உருவாக்கிய கல்லணையில் நீர் திறக்கப்பட்டது!

பொன்மணியென நெல்மணி விளைந்திடப் புறப்பட்ட பொன்னி நதியால் தஞ்சை செழிக்கட்டும்! உழவர் பெருமக்கள் வளம் காணட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தி.அ.முகமது சகி தலைமை! ஏ.பி.நந்தகுமார் முன்னிலை!

வேலூர் மாவட்ட தி.மு.க. செயற்குழு அவசரக் கூட்டம்!

கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் ஆலோசனை வழங்கினார்!

வேலூர், ஜீன் 17 – வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் செயற்குழு அவசரக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் நடந்தது.மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார்.

இதில் கழக பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் வேலூர் மாவட்டம் வருகை குறித்து ஆலோசனை வழங்கினார்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, மாவட்ட பொருளாளர் நரசிம்மன், மாவட்ட துணை செயலாளர் டாக்டர் பிரபாத் குமார் மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ். விஜய், வேலூர் ரமேஷ், சேர்க்காடு கென்னடி, தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர் என்.சுப்பிரமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.கதிரேசன்,மா.ப.அன்பு நிதி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம். சுனில்குமார் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக பகுதி செயலாளர்கள் கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு :

குஜராத் மாநிலம், அஹமதாபாத்தில் எதிர்பாராத விதமாக நிகழ்ந்த மாபெரும் கோர விமான விபத்தில் தன்இன்னுயிர் நீத்த அத்தனை ஆன்மாக்களும் அமரத்துவம் அடைந்திடவும், விபத்தில் உயிர் நீத்தோரின் அத்தனை குடும்பங்களுக்கும் ஆறுதலை தெரிவித்து வேலூர் மாவட்ட திமுக சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

இந்திய ஒன்றியத்தில் மாநிலங்களை ஆளும் முதல்வர்களில் முதன்மையான முதல்வராக திகழும் திராவிட மாடல் முதல்வர், கழகத்தலைவர் தளபதி அவர்கள் வரும் 25.06.2025 அன்று வேலூர் மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சியில் முற்பகல் 11.00 மணிக்கு காட்பாடி ரயில் நிலையத்திற்கு வருகை தந்து வேலூர் பெண்டலன்ட் மருத்துவமனை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பல்நோக்கு மருத்துவமனை, காட்பாடி சேர்க்காட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தாலுகா மருத்துவமனை மற்றும் குடியாத்தம் தாலுகா மருத்துவமனை ஆகியவற்றை திறந்து வைத்து வேலூர் விருந்தினர் மாளிகைக்கு செல்ல உள்ளார்.

அதுசமயம் காட்பாடி ரெயில் நிலையத்தில் இருந்து வேலூர் விருந்தினர் மாளிகை வரை கழக இருவண்ணக் கொடி மற்றும் தோரணங்கள் அமைத்து வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு அளித்து வரவேற்றிட மாவட்டதிற்கு உட்பட்ட அனைத்து நிர்வாகிகளும் அணிதிரள வேண்டுமாய் வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

வேலூர் மாவட்ட தி.மு.க.விற்கு உட்பட்ட அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி கெங்கநல்லூரில் 25.06.2025 அன்று அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் கலைஞர் அறிவாலயம் மற்றும் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் வெண்கல சிலையை திறந்து வைக்க வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் கழகத்தலைவர் தளபதி அவர்களை அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் வருக வருக என வரவேற்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

இந்தியா என்பது மாபெரும் பன்முக தன்மை கொண்ட கலாச்சார நாடாகும். சாதி மதம் பேதம் கடந்து தமிழ்நாட்டில் சமத்துவத்துடனும், சகோதரத்துவத்துடனும் ஒன்றுகூடி ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் இந்த வேளையில் ஒன்றியத்தில் ஆளும் பாசிச பா.ஜ.க., அதன் தாய் அமைப்பான RSS பஜ்ரங்தள் போன்ற வகுப்பு வாத மதவாத சக்திகளின் பிரித்தாளும் கயமை அரசியலை தமிழகத்தில் விதைத்து அதன் மூலம் சாதி, மத பேத வெறுப்பு அரசியலை முன்னெடுக்கும் மக்கள் விரோத பா.ஜ.க. செயல்பாடுகளை வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கடுமையான கண்டனத்தை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

எதிர்வரும் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலை தமிழுக்கு எதிராகவும், தமிழர் நலனுக்கு மாறாகவும், தமிழ்நாட்டிற்கு கேடுவிளைவிக்கும் ஜனநாயக சமத்துவத்திற்கு எதிராக பாசிச பா.ஜ.க.வோடு கைகோர்த்து தமிழகத்தில் மக்கள் விரோத அரசை அமைப்பதில் முனைப்பு காட்டுபவர்களுக்கு எதிரான அத்தனை தமிழர்கள் விரோத கூட்டணியை திராவிட மாடல் அரசின் அசாத்திய முதல்வர் கழகத்தலைவர் அவர்கள் நிகழ்த்தி காட்டியுள்ள மக்கள் நலன் மற்றும் தாய் மொழி தாய்நாடு உயர்வுக்கான பலமுற்போக்கு நல்திட்டங்களை எடுத்துகூறி அனைத்து தொகுதிகளிலும் பெருவாரியான வாக்குகளை பெற்று இனஎதிரிகளை தோற்கடித்து வெற்றிபெற இன்றே ஆயத்தமாவோம் என அனைத்து நிர்வாகிகளையும் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மரக்காணம் ஒன்றியம் ஆத்தூர் ஊராட்சியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ்

ரூ.1 கோடியே 8 லட்சம் மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலை அமைக்கும் பணி!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திண்டிவனம், ஜூன் 17 - மரக்காணம் ஒன்றியம் ஆத்தூர் ஊராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1 கோடியே 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார் சாலை அமைப்பதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ பணியை தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் ஆத்தூர் ஊராட்சியில் இருந்து வட ஆலபாக்கம் வழியாக மானூர் செல்லும் சாலையை தரம் உயர்த்தி தார் சாலையாக அமைக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1 கோடியே 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வட ஆலப்பாக்கம் மானூர் செல்லும் சாலையை தரம் உயர்த்தி தார் சாலையாக அமைப்பதற்கான ஆத்தூர் ஊராட்சியில் நடைபெற்றது.

மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார். ஒன்றிய துணை சேர்மன் பழனி, மாவட்ட ஊராட்சி துணை சேர்மன் ஷீலா தேவி சேரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர்கள் மன்னார், ரமேஷ், குமாரி லட்சுமி காந்தன், சிவக்குமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில்முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டுஆத்தூர் ஊராட்சியில் இருந்து வட ஆலபாக்கம் மானூர் செல்லும் சாலையை 1 கோடியே 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலையாக அமைப்பதற்கு பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில்வட்டார வளர்ச்சி அலுவலர் சிலம்புச் செல்வன், ஒன்றிய பொறியாளர் நிவாஸ், விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,

ஒன்றிய கவுன்சிலர்கள் மகாலட்சுமி காளிதாஸ், திருநாவுக்கரசு, வேலாயுதம், மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் திருமலை, மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் கன்னியப்பன், ஐ.கே. எஸ். ஆறுமுகம், செந்தில்குமார், மாரி, ஒன்றிய நிர்வாகிகள் குமார், ராமமூர்த்தி, ரவிக்குமார் , முருகன், ஆதிகேசவன், தேவதாஸ், முத்துக்குமார், முருகா னந்தம், ஜானகிராமன், ஏழுமலை, பச்சையப்பன், வாசுதேவன், வல்லரசு, ஆதி மூலம், ரவி, கலைமணி, கோகுல், செங்கேணி, சுகுமார், ரத்தினவேல், சதீஷ், சுதாகர் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அரசு விழுப்புரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டயாலிசிஸ் உட்பட்ட அனைத்து நோய்களுக்கும் புரத சத்து நிறைந்த உணவு வழங்கும் திட்டத்தை விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா துவக்கி வைத்தார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நெல்லை கணபதி ராமசுப்பையா
ஜூன் 17 (2006)

கழகத்தில் துவக்கக் காலந்தொட்டு உறுப்பினராக இருந்தவர். மாணவப் பருவத்திலிருந்தே திராவிட இயக்க உணர்வுடன் இந்தி எதிர்ப்பு, கம்யூனல் ஜி.ஓ. ரத்து, கருப்புக்கொடி, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, தேவிகுளம் பீர்மேடு மீட்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றவர்.

மாணவர் தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாநாடுகளில் அமைப்பாளராக சிறப்புற பணியாற்றியவர்.

தனது நெருங்கிய நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் கழகத்திற்கு துரோகம் செய்து, கழகத்தைவிட்டு வெளியேறியபோதும் 'தனது தலைவர் கலைஞர்தான்' என்று தொடர்ந்து கழகத்தில் பணியாற்றியவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.